**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 350/மா/**2023**

நாள்: **29.11.2023**

திரு.G. விமல்குமார்,
சென்னை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி ஹைரோடு, கதவு எண்.8/18 என்கிற முகவரியில் வசிக்கும் G.விமல்குமார் என்பவரின் 12.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2023–ல் பெறப்பட்டு, 350/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி ஹைரோடு, கதவு எண்.8/18 என்கிற முகவரியில் வசிக்கும் G.விமல்குமார் என்பவர் தனது 12.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" நான் 06.06.2023 அன்று தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தின் சுகாதார அலுவலர்/பிறப்பு & இறப்பு பதிவாளர் அலுவலருக்கு பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் எனது மகன் பாலகுருநாதனின் பிறப்பு சான்றிதழில் பெயர் மாற்றம் செய்து தர வேண்டி மனு அளித்தேன். மேற்படியான மனு மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமின்றி எனது மனுவை கிடப்பில் போட்டு விட்டார்களோ என்ற அச்சத்திலும் குழப்பத்திலும் மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டேன். இதுவும் ஒருவகையில் மனித உரிமை மீறல் என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

தஞ்சாவூர் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கடந்த 4 மாதங்களுக்கு மேலாக எனது கோரிக்கை மனுவின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் இந்த புகார் மனுவை நீதிமன்ற சாசனம் இந்திய சாட்சிய சட்டம் 1872–ன் 159வது பிரிவுப்படி நினைவூட்டும் விண்ணப்பமாக கருத்தில் கொண்டு எனது மனுவின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சுகாதாரப்பிரிவில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் (தொலைபேசி எடுப்பவர்/வரவேற்பாளர், அலுவலக எழுத்தர்/தபால் அலுவலர், மேலாளர், மண்டல அலுவலர், ஆணையாளர், சுகாதார பிரிவின் அலுவலக எழுத்தர், சுகாதார ஆய்வாளர்/பிறப்பு &

இறப்பு பதிவாளர் மற்றும் சுகதார அலுவலர் ஆகியோர் அரசு ஊழியராகச் சட்டத்துக்கு கீழ்ப்படியாமலும் அவர்களுக்குண்டான கடமையை பொது மக்களுக்கு (அதாவது மனுதாரரான எனக்கு) தீங்கு விளைவிக்கும் நோக்கத்தில் செயல்பட்டதற்காக IPC Sec 166, 166 A & 167 ஆகிய சட்டப் பிரிவுகளின் கீழ் மேற்படி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது காவல் துறையில் போதிய சாட்சி ஆவணங்களுடன் புகார் அளிக்க உள்ளேன் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப்படி சுதந்திரம் எனது பிறப்புரிமை. ஆனால் எனது சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது. அரசுஅலுவலகங்கள் இயங்கும் செலவுகள் யாவும் மக்கள் வரிப்பணத்திலிருந்துதான் செய்யப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பொது அதிகார அமைப்பு/அரசு அலுவலகங்கள்/அரசு அலுவலர்கள் அவர்களது பணியை அல்லது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை என்றால், அதனை தானாக முன்வந்து சம்பந்தப்பட்ட தவறுகளை சரி செய்ய வேண்டிய கடமையும், கட்டாயமும் இந்திய குடிமகனான எனக்கு உள்ளது' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 22.11.2023 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 22.11.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அரசின் பல சேவைகளில் ஒன்றான பிறப்பு/இறப்பு பதிவு பணியின் கீழ் மக்கள் பயன்படக்கூடிய அளவில் பிறப்பு/இறப்புக்களைப் பதிவு/திருத்தம்/மாற்றம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் அலுவலர்களிடம்தான் அதற்கான பதிவு செய்யக்கூடிய ஒரு நிகழ்வு இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது என்பதால்:-

நான் எனது மகன் V.பாலகுருநாதனின் பிறப்பு சான்றில் (சான்று எண்.107/2015/05/14488 தஞ்சாவூர் மாநகராட்சி) V. மணிகண்டன் (old name) என்ற பெயரை V.பாலகுருநாதன் (new name) ஆக மாற்றம் செய்து தரக்கோரி 06.06.2023ஆம் தேதி அன்று மேற்படி கோரிக்கை மனுவின் இணைப்பில் உள்ளவாறு தேவையான அனைத்து ஆவணங்களையும் மனுவுடன் சமர்ப்பித்து தஞ்சாவூர் மாநகராட்சி அலுவலகத்தின் சுகாதார அலுவலர் அதனை பெற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள், எவரும் எனது மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தமிழ்நாடு பிறப்பு/இறப்பு பதிவு சட்டம் 1969-ல் சட்டப்பிரிவு 15-யை தவறாக புரிந்து கொண்டு பொய்யான தகவலை சுட்டிக்காட்டி எனது மனுவில் உள்ள பிறப்பு சான்றில் பெயர் மாற்றம் செய்ய இயலாது என தவறாக தெரிவித்துள்ளார்கள். மேற்படி கடிதத்துடன் உண்மையற்ற ஒரு கடிதத்தை தயார் செய்து இணைத்து அனுப்பியுள்ளார். ஏனென்றால் எனக்கு 16.06.2023 தேதியிட்ட கடிதம் இதுநாள் வரை எதுவும் கிடைக்கப்பெறவில்லை. மேற்படி கடிதம் உண்மை என்றால் அந்த கடிதத்தின் போக்குவரத்து விவரங்களுடன் கூடிய நான் ஒப்பம் செய்து பெற்றுக்கொண்ட AD card மற்றும் அலுவலக தபால் பதிவேட்டின் விவரங்களை அவர்கள் தங்கள் முன்பு சாட்சி ஆவணங்களாக சமர்ப்பிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பிறப்பு/இறப்பு பதிவு சட்டம் **1969** பிரிவு **15**–ல் பிறப்பு சான்றில் பெயர் மாற்றம் செய்யக்கூடாது என எங்கேயும் சொல்லப்படவில்லை. மேலும் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதாவது, பிறப்பு சான்றில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் ஏதாவது செய்யப்பட வேண்டும் எனில் சம்பந்தப்பட்ட பிறப்பு/இறப்பு பதிவாளரால், மனுதாரர் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் திருப்தி அடையும் பட்சத்தில் சட்டப்படி கண்டிப்பாக மேற்படியான மாற்றங்கள்/திருத்தங்கள் செய்து கொள்ளலாம் என மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தில் இல்லாத ஒன்றையும், தவறான காரணத்தை குறிப்பிட்டு மனுதாரரின் கோரிக்கை விண்ணப்பத்தை நிராகரிப்பது என்பது சட்டப்படியான குற்றச்செயல் ஆகும்.

கீழே குறிப்பிட்டுள்ள சில வழக்குகளின் தீர்ப்புகளில் – பிறப்பு சான்றில் பெயர்/பிறந்த தேதி/உறவினர் பெயர் உள்ளிட்ட விவரங்களை திருத்தங்கள்/மாற்றங்கள் செய்யப்படலாம் என மாண்பமை உச்சநீதிமன்றம் & உயர்நீதிமன்றம் ஆகியவைகளின் மகத்தான தீர்ப்புகள்& நீதி பேராணைகள் பல உள்ளது என்பதையும் இந்நேர்வில் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

i) In the High Court of Judicature at Madras dated. 05.06.2020 Coram the Honourable Mrs. Justice Pushpa Sathyanarayana W.P.No.25374 of 2017 – V.Vedhani .....Petitioner Versus 1. The Commissioner, and 4 others.

ii) In the Madurai Bench of Madras High Court dated. 22.12.2020 Coram: The Honourable Mr.Justice Abdul Quddhose WP.(MD) No.;18984 of 2020 – consequently direct the respondent to issue a correct birth certificate mentioning the correct father's name and house address ....correct the name of the father as well as by incorporating the correct address in the Birth Certificate.

iii) In the High Court of Judicature at Madras dated. 19.02.2021 Coram: The Honourable Mr.Justice Abdul Quddhose W.P.No.880 of 2021 and WMP No.961 of 2021 S.Malleswari . . . . Petitioner vs. Zonal Health Officer (pu.ve) Public Health Department. Greater Chennai Corporation Order: Pothu Thu su/ma. Na.A. (Pu.ve) Na.Ka.No.-0115-2020 to quash the same and consequently direct the respondent to correct the error and insert the name of the petitioner as Malleswari in the place of Maheswari and issue a fresh corrected birth certificate to the petitioner.

iv) Before the Madurai Bench of Madras High Court dated. 13.07.2023 Coram: The Honourable Mr.Justice B.Pugalendhi WP (MD) No.13468 of 2023 and WMP (MD) No.11351 of 2023 T.Narayanadhas . . .Petitioner Vs. The Registrar of Births and Deaths, Nagercoil Corporation Office,

v) In the High Court of Judicature at Madras dated. 23.03.2011 The Honourable Mr. Justice B.Rajendran W.P.No.2182 of 2011 S.Karnan . . . Petitioner versus 1. The Commissioner, 2. The Registrar of Births and Deaths, Corporation of Madurai, Madurai. Order: Court directs the authorities to incorporate the name as found in the Government

Gazette Notification in the Birth Register and issue amended Birth Certificate.

vi) Before the Madurai Bench of Madras High Court (Special Original Jurisdiction) Tuesday, the Twenty fourth day of April Two thousand eighteen present The Hon'ble Mr.Justice M.S.Ramesh WP(MD) No.8319 of 2018 . . .MS. Mathumitha Ramesh Vs. The Chief Health Officer, The Public Health Care Department, Trichy Municipal Corporation (Births and Deaths)

அரசாணை(நிலை) எண்.73 நாள் 11.06.2028 மற்றும் அரசாணை எண்.99 நாள் 21.09.2015ன்படியும், பிற அரசாணைகள் 66,89, 86, 114 மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு W.P.No.20527/2014 வழிகாட்டுதல்கள்படி அரசு பொது ஊழியர்கள் மனுதாரரிடமிருந்து பெறும் எந்த மனுவாக இருந்தாலும் அதனை அரசு அலுவலகத்தில் பெற்ற 3 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு ஒப்புகை வழங்க வேண்டும் மற்றும் மேற்படி மனு மீது 30 நாட்களுக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அரசு அலுவலகத்தின் பொது ஊழியருக்கு உள்ளது என சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் எனது மனுவைப்பெற்ற தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு பொது ஊழியர்கள் எனது கோரிக்கை மனுவுக்குண்டான ஒப்புகை ரசீதினை இதுநாள் வரை மனுதாரரான எனக்கு வழங்கவில்லை.

குறிப்பு: நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாவிட்டால் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும் சிறையில் அடைக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் – Before the Madurai Bench of Madras High Court dated. 12.10.2020 coram: The Honourable Mr.Justice S.Vaidyanathan W.P.(MD) No.14135 of 2020 Mathavadiyan vs. The Revenue Divisional Officer and 8 others dated. 12.10.2020 என்ற தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படியான மனு மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதால் எனக்கு பெரும் மன அழுத்தம் & குழப்பம் ஏற்பட்டதால் நான் மிக மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டேன். நான் சாதாரன (வாடகை கார் டிரைவர்) கூலித்தொழிலாளி. இந்த பெயர் மாற்றம் பிரச்சனையால், எனது மகனின் எதிர்கால படிப்பு மற்றும் வாழ்க்கையை தினம் நினைத்துக்கொண்டு எனது மனதில் மிகுந்த குழப்பம் அடைந்திருப்பதால் நான் சரியாக வேலைக்கு போக முடியாமல் ஆனபடியால் எனது வருமானம் மற்றும் எனது அன்றாட வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுவிட்டது.

எதிர்மனுதாரர்களான தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அலுவலர்களால் நான் இந்த நிலமைக்கு ஆளாக காரணமாக மட்டுமல்லாமல், அவர்கள் மனித உரிமை மீறல் குற்றத்தை செய்துள்ளார் எனவும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆதலால் நான் இது சம்பந்தமாக மனித உரிமை ஆணையத்தை நாடுவதில் எனக்கு எந்தவிதத்திலும் தடை ஏதும் இல்லை.

எனது கோரிக்கை மனுவின் விண்ணப்ப கட்டணமாக ரூபாய் 1/– ஐ நீதிமன்ற வில்லை மற்றும் இது சம்பந்தமான RTI Act –ல் தகவல் மனுவுக்காக ரூபாய் 10/–ஐ நீதிமன்ற வில்லையாக ஒட்டி சமர்ப்பித்துள்ளேன் எனபதால் நான் நுகர்வோர் ஆகிறேன். ஆதலால் நான் இது சம்பந்தமாக நுகர்வோர் ஆணையத்தையும் நாடுவதில் எனக்கு எந்தவிதத்திலும் தடை ஏதும் இல்லை.

இந்திய அரசியல் சாசனம் 1950ன் கீழ் சுதந்திரம் என்பது சட்டப்படியான எனது பிறப்புரிமை. ஆனால் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட பிற அலுவலர்களால் எனது சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது. இதுவும் எதிர்மனுதாரர்கள் மீதான குற்றச்செயல் ஆகும்.

எனது கோரிக்கை மனுவில் எனது பெயரின் initial ஐ சரியாக அச்சிட்டு சமர்ப்பித்துள்ளேன். ஆனால் தஞ்சாவூர் மாநகராட்சியின் ஆணையரிடமிருந்து எனக்குப் பெறப்பட்ட பதில் கடிதத்தில் எனது பெயரின் initialஐ வேண்டுமென்றே மாற்றி எனது தந்தை பெயரை கொச்சை படுத்தும் வகையில் எனக்கும் எனது குடும்பத்துக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

எனது கோரிக்கை மனுவின் விவரத்தை தெரிந்து கொள்ள சம்பந்தப்பட்ட அரசு அலுவலகமான தஞ்சாவூர் மாநகராட்சியின் தொடர்பு எண்ணை Googleலில் இருந்து எடுத்து தொடர்பு கொண்டு மேற்படி எனது மனு மீது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பிறப்பு/இறப்பு பதிவாளர், சுகாதார ஆய்வாளர்/சுகாதார அலுவலர், மேலாளர் மற்றும் ஆணையர்/உதவி ஆணையர் அவர்களின் தொடர்பு எண்களை வழங்கும்படி கேட்டால், அந்த தொலைபேசியை எடுத்த அந்த பெயர் தெரியாத இருநபர்களான அலுவலக உதவியாளர்/அரசு பொது ஊழியர்கள் மனுதாரரான என்னிடம் தாங்கள் மனுவை நேரில் தான் கொடுக்க வேண்டும் மற்றும் பதிவு தபால் மூலமாக அனுப்பக்கூடாது எனவும், என்னை சென்னையிலிருந்து தஞ்சாவூரில் உள்ள மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து சம்பந்தப்பட்ட அலுவலர்களை பார்த்து தெரிந்து கொள்ளவும் என அவர்கள் இருவரும் தெரிவித்தனர். அதன்படி மனுதாரர் கட்டாயமாக மனு கொடுக்க சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு நேரில் வர வேண்டும் எனில் ஏன் ஆணையர் அவர்கள் அவர்களின் அலுவலக கடிதத்தில் குறிப்பிடவில்லை என தெரியவில்லை.

மேலும் மனுதாரர் அவரின் சேவையை அரசிடமிருந்து பெற சம்பந்தப்பட்ட அரசு பொது ஊழியரை தொடர்பு கொள்ள கட்டாயமாக நேரில் தான் வர வேண்டும் எனில் எதற்காக அரசு ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகத்தை அமைத்திட RTI Act Sec 4( 1) (b) ன் கீழ் ஒவ்வொரு பொது அதிகார அமைப்பும் தாமாக முன் வந்து வெளிப்படுத்த வேண்டிய அலுவலகம் மற்றும் அலுவலர்களின் விவரங்களை அலுவலகத்தில் பதாகையாகவும், இணையத்தில் பட்டியலிட்டும் மக்களுக்கு பொதுவாக தெரிவிக்க வேண்டும் என்று சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதனை அவர்கள் கடைபிடிக்க தவறிவிட்டனர்.

எனவே மேற்படி சுகாதாரப்பிரிவில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் (தொலைபேசி எடுப்பர்/வரவேற்பாளர், அலுவலக எழுத்தர்/தபால் அலுவலர், மேலாளர், மண்டல அலுவலர், ஆணையாளர், சுகாதார பிரிவின் அலுவலக எழுத்தர், சுகாதார ஆய்வாளர்/பிறப்பு & இறப்பு பதிவாளர் மற்றும் சுகாதார அலுவலர் ஆகியோர் அரசு ஊழியராகச் சட்டத்துக்கு கீழ்ப்படியாமலும் அவர்களுக்குண்டான கடமையை பொதுமக்களுக்கு(அதாவது மனுதாரரான எனக்கு) தீங்கு விளைவிக்கும் நோக்கத்தில் செயல்பட்டதற்காகவும் அவர்கள் மீது Disciplinary Action - அரசு ஊழியர் பணி ஒழுங்கு நடவடிக்கை விதிகள் 17A & 17B –ன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அரசு உயர்மட்ட அலுவலருக்கு தாங்கள் பரிந்துரை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே தஞ்சாவூர் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக எனது கோரிக்கை மனு மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் & சம்பந்தப்பட்ட பிற அரசு பொது ஊழியர்கள் மீது நான் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் 12.09.2023 அன்று புகார்

அளித்தேன். மேற்படியான புகார் மனுவின் விசாரணையின்போது நீதிமன்ற சாசனம் இந்திய சாட்சிய சட்டம் 1872ன் கீழ் எனது இந்த வாக்குமூலத்தை பதிவு செய்கிறேன்.

எனவே எனது கோரிக்கை விண்ணப்பத்தில் நான் கோரியுள்ளபடி எனது மகன் V.பாலகுருநாதனின் பெயரை பிறப்புச்சான்றில் மாற்றம் செய்து தரக்கோரி அளித்த விண்ணப்பத்தின் பெயரில் தாங்கள் இந்த விசாரணையின் முடிவில், சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டவாறு எனக்கு காலதாமதம் இன்றி V.பாலகுருநாதன் என எனது மகனின் பிறப்புச்சான்றில் பெயர் மாற்றம் செய்து தர வேண்டுமென சட்டத்தை நிலைநாட்டும் வகையிலும், மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், அதன் நடுவர் ஆனவர் 1908ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறை தொகுப்புச் சட்டத்தின்படி உரிமை வழக்கு ஒன்றினை விசாரணை செய்யும் உரிமையியல் நீதிமன்றமொன்றின் அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருப்பதால், மேற்படியான உச்சநீதிமன்றம் & உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மேற்கோளாக வைத்து மகத்தான தீர்ப்பை வழங்கி எனது குறைகளை நிவர்த்தி செய்து தரும் வகையில் உத்தரவினை பிறப்பித்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) தஞ்சாவூர் மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் 22.11.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

" மனுதாரரின் மனைவி மங்கையர்கரசி என்பவருக்கு கடந்த 04.12.2015 அன்று தஞ்சாவூர் அரசு ராஜா மிராசுதாரர் மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது என்றும் அக்குழந்தைக்கு மணிகண்டன் என பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து தஞ்சாவூர் மாநகராட்சியில் 07.12.2015ல் பெயர் பதிவு செய்ததையொட்டி, மனுதாரரின் மகன் மணிகண்டனுக்கு 16.12.2015 அன்று தஞ்சாவூர் மாநகராட்சியால் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தற்போது எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கண்ட மணிகண்டன் என்கின்ற பெயரை பாலகுருநாதன் என மாற்றம் செய்திடக்கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். உள்துறை அமைச்சகத்தின் 29.12.2014 நாளிட்ட கடிதத்தின்படி மனுதாரின் குழந்தைக்கு வேறு பெயரை மாற்றி மாநகராட்சியால் புதிய பிறப்புச் சான்றிதழை வழங்க வழிவகையில்லை என தெரிவித்து மனுதாரருக்கு கடைசியாக 12.09.2023 அன்று தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து, அதன் நகலையும் மற்றும் மேற்கண்ட உள்துறை அமைச்சகத்தின் 29.12.2014 நாளிட்ட கடிதத்தின் நகலையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் இந்நேர்வு குறித்து இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் 21.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தனது 21.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

" இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை, சென்னை அவர்களின் 27.01.2015ம் தேதிய கடிதம் R.No.1261/SBHI-I/S1/2015/SC மற்றும் துணை பதிவாளர் (பொது) புதுடில்லி, அவர்களின் 29.12.2014ம் தேதிய கடிதம் 1/12/2014 – VS (CRS)/4173 ஐ பின்பற்றி பிறப்பு/இறப்பு பதிவு சட்டம் 1969 பிரிவு 14—ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

Once the name of child is entered in the birth certificate it cannot be changed. They should be asked to enter the name when it is finalized. While accepting the request for entering the name of child in the birth record, the name of child should be written in capital letters, so that chances of spelling mistakes can be minimized. An undertaking from the parents of the child may be given/taken at the time of registration of name of child that name will not be changed in future. ( Copy of letter enclosed.)

எனவே மனுதாரர் விண்ணப்பத்திற்கிணங்க ஒரு முறை குழந்தையின் பெயரை பிறப்புச் சான்றிதழில் பதிவு செய்து சான்று வழங்கிய பின் அதற்கான பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய இயலாது. மேலும் மனுதாரர் தனது குழந்தையின் பெயரை 05.12.2018 தமிழ்நாடு அரசிதழ் வ.எண்.28802ல் மணிகண்டன் என்ற பெயரை பாலகுருநாதன் என பெயர் மாற்றம் செய்துள்ளார். Name changed in Gazette Notification need not be incorporated in the birth certificate. Hence the applicant my be informed of the fact that he may carry the Gazette Notification along with the birth certificate issued earlier whenever required என தமிழக முதன்மை பதிவாளர் ந.க.எண்.85876/SBHI-1/S1/2001 நாள் 18.07.2001ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒருமுறை குழந்தையின பெயரை பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்து பிறப்புச்சான்று வழங்கிய பின் அதற்கான பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய இயலாது என்ற விவரம் இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் மனுதாருக்கு 16.06.2023, 08.08.2023, 21.08.2023 மற்றும் 12.09.2023 ஆகிய தேதிகளில் மனுதாரர் அளித்திருந்த விண்ணப்பத்திற்கு உரிய பதில் பதிவு அஞ்சல் வழியாக அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனுவின் மீது மேல் நடவடிக்கை ஏதும் தொடர வேண்டாம் என பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சி சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:**

மனுதாரர் திரு.G. விமல்குமார் தனது மகன் V.மணிகண்டன் பெயரை V.பாலகுருநாதன் என்று பிறப்பு சான்றிதழில் பெயர் மாற்றம் செய்து தர கோரியுள்ளார்.

மனுதாரரின் மகன் மணிகண்டனுக்கு 16.12.2015 அன்று தஞ்சாவூர் மாநகராட்சியால் பிறப்புச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. எட்டு ஆண்டுகளுக்கு பின்னர் "மணிகண்டன்" என்ற பெயரை " பாலகுருநாதன்" என மாற்றம் செய்திடக் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

உள்துறை அமைச்சகத்தின் 29.12.2014 நாளிட்ட கடிதத்தின்படி மனுதாரரின் குழந்தைக்கு வேறு பெயரை மாற்றி மாநகராட்சியால் புதிய பிறப்புச் சான்றிதழை வழங்க வழிவகையில்லை என மனுதாரருக்கு கடைசியாக 12.09.2023 அன்று தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது என்பதை தஞ்சாவூர் மாநகராட்சி சுகாதார ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது. மேலும் ஆணையாளர் தஞ்சாவூர் மாநகராட்சி அவர்களும் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை சென்னை அவர்களின் 27.01.2015 ம் தேதிய கடிதத்தின்படியும் மற்றும் துணைப் பதிவாளர் (பொது) புதுடில்லி அவர்களின் 29.12.2014ம் தேதிய கடிதத்தின்படியும் பெயர் மாற்றம் செய்ய இயலாது என மனுதாருக்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

எனவே, இந்நேர்வில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் அடிப்படையில் இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாமென கருதி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. G. விமல்குமார்,
த/பெ. திரு.குணசேகரன்,
நெ. 8/18, நெமிலிச்சேரி ஹை ரோடு,
நெமிலிச்சேரி, குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

2) ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028கு.

4) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றம்
சென்னை-600 032